சுற்றறிக்கை இலக்கம் - PRE/2024/17

எனது இல.:-TR/PRE/CIR/2024
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, ராஜகிரிய.
2024.07.28

TR - 03

மிக முக்கியம்

அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்
பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு,

**சனாதிபதித் தேர்தல் - 2024**

1. **தேர்தல் கடமைகளின்போது தொழில்நுட்பக் கோளாறுகளுக்குட்படும் அரசாங்க வாகனங்களின் பழுதுபார்ப்புக்கள்.**
2. **திடீர் விபத்துக்களுக்குட்படும் அரசாங்க வாகனங்கள் தொடர்பாக அலுவல் மேற்கொள்ளல்.**

2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலின் ஆரம்ப ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக தங்களால் பயன்படுத்திக்கொள்ளப்படும் அரசாங்க வாகனமொன்று அல்லது தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்துவதற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க வாகனமொன்று அல்லது அலுவலர்களால் கொண்டுவரப்பட்ட அரசாங்க வாகனமொன்று **தொழில்நுட்பக் கோளாறுகளுக்குட்படும்போது அல்லது திடீர் விபத்துகளுக்குட்படும்போது கீழ் குறிப்பிடப்படும் நடைமுறைகளை பின்பற்ற வேண்டுமென தயவாய் அறியத்தருகின்றேன்.**

1. **தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்திக்கொள்ளப்படும் வாகனமொன்று தொழில்நுட்பக் கோளாறுகளுக்குட்பட்டால் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்**

1.1. ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறு சம்பந்தமாகவும் மேற்கொள்ளவேண்டிய பழுதுபார்ப்புக்கள் சம்பந்தமாகவும் மாவட்ட செயலகத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளவும்.

1.2. மாவட்ட செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மூன்று வாகன பழுதுபார்ப்பு நிலையங்களிடமிருந்து (கராஜ்) விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கவும்.

1.3. அந்த விலைமனுக்கள் சம்பந்தமாக மோட்டார் வாகனப் பரிசோதகரின் பரிந்துரை மற்றும் தங்களுடைய பரிந்துரையுடன் உடனடியாக 011 2885228 எனும் பெக்ஸ் இலக்கம் ஊடாக மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளருக்கு (நிருவாகம்) அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**தங்களுடைய பரிந்துரை மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களைக் கவனத்திற்கொண்டு தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தினால் உரிய பழுதுபார்ப்புக்களுக்கான அங்கீகாரம் வழங்கப்படும். அதன் பின்னர்,**

1.4. அங்கீகரிக்கப்பட்ட கராஜ் மூலம் பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ளவும்.

1.5. பழுதுபார்ப்புக்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் பரிசோதகர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

1.6. உரிய வாகனத்தின் லொக் புத்தகத்தில் குறிப்பிடுதல் :- பழுதுபார்ப்பு சம்பந்தமான தகவல்கள் மற்றும் அதற்கு செலவான தொகையை உரிய நிறுவனத் தலைவருக்கு எழுத்து மூலமாக அறிவித்து அத்தகவல்களை லொக் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொண்டதாக அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளவும்.

1.7. அனைத்து பழுதுபார்ப்புக்களின் இறுதியிலும் கீழ் குறிப்பிடப்படும் தகவல்களை தலைமை அலுவலகத்தின் போக்குவரத்துப் பிரிவுக்கு அனுப்பி வைக்கவும்.

i. லொக் (Log) புத்தகத்தில் குறித்துக்கொள்ளப்பட்டதாக பெற்றுக்கொள்ளப்பட்ட அறிக்கையின் பிரதி

ii. பழுதுபார்ப்பு சம்பந்தமாக மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கை

iii. இறுதி விலைப் பட்டியலின் பிரதி

1.8. குறித்த பழுதுபார்ப்புக்களின் பின்னர் உரிய பிரகாரம் விலைப்பட்டியல்களை செலுத்தித் தீர்ப்பதற்காக தலைமைக் கணக்காளரூடாக தேவையான நிதியை ஒதுக்கிக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு மேற்கொள்ளப்படும் அனைத்துப் பழுதுபார்ப்புக்கள் சம்பந்தமாகவும் தனியான அறிக்கையொன்றை பேணிவரல் வேண்டும்.

முக்கியம் :★★. **தேர்தல் அலுவல்களுக்காக பயன்படுத்திக்கொள்ளப்படும் அரசாங்க வாகனங்கள் தவிர வேறு எந்தவொரு வாகனத்தினதும் பழுதுபார்ப்புக்கள் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழு தலையீட்டை மேற்கொள்ளக்கூடாது.**

★★. **பாரிய பழுதுபார்ப்புக்களைக் கொண்டுள்ள / பழுதடைந்த வாகனங்களை தேர்தல் கடமைகளுக்கு பயன்படுத்திக்கொள்வதனை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.**

## 2. திடீர் விபத்துக்குட்படும் அரசாங்க வாகனங்கள் சம்பந்தமாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்திக்கொள்ளப்படும் வாகனமொன்று திடீர் விபத்துக்குட்பட்டால் பொதுவான வீதி விபத்தொன்றின்போது பின்பற்ற வேண்டிய பிரகாரம் **பொலீஸுக்கு அறிவித்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.**

2.1. விபத்து சம்பந்தமாக மேலதிகத் தேர்தலகள் ஆணையாளருக்கும் (நிருவாகம்), அந்த வாகனத்திற்குரிய நிறுவனத்தின் தலைவர் / போக்குவரத்து அலுவலருக்கும் உடனடியாக அறிவித்தல் வேண்டும். மேலும் அவ்வாறான விபத்துக்கள் சம்பந்தமாக தங்களுக்கும் அறிவிக்குமாறு போக்குவரத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

2.2. வாகனம் காப்புறுதி செய்யப்பட்டுள்ள காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்தல்.

2.3. விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தை செலுத்திய சாரதியின் வாக்குமூலத்தைக் குறித்துக்கொள்ளுதல்.

2.4. விபத்து நிகழ்ந்த சந்தர்ப்பத்தில் வாகனத்தில் பயணித்த ஏனைய நபர்கள் இருப்பின் அவர்களது வாக்குமூலங்களை குறித்துக்கொள்ளல்.

2.5. வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் சம்பந்தமாக மோட்டார் வாகனப் பரிசோதகர் ஒருவர் / பதவிநிலை அலுவலரொருவரூடாக பரீட்சித்து அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

2.6 “சனாதிபதித் தேர்தல் - 2024.09.21 பூர்வாங்க ஏற்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நிருவாகம் சார்ந்த அலுவல்கள்” எனும் தலைப்பில் 2024.07.27 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் 9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வாகனம் பூரணக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருப்பதனால் நட்டத்தை உரிய காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

2.7 விபத்துக்குள்ளான வாகனத்தை பழுதுபார்ப்பதற்கான நிதி இந்த ஆணைக்குழுவின் செலவுத் தலைப்புக்களினூடாக செலவிடப்படுமாயின் மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்படும் விபரங்களையும் வழங்குதல் வேண்டும்.

I. வாகனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் சம்பந்தமான முழு விபரம்
II. மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கையுடன் தோராயமான மதிப்பீடு
III. பொலீஸ் அறிக்கையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
IV. குறித்த காப்புறுதி நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டை அறவிட்டுக்கொள்வதற்கான காரணங்கள்
V. குறைந்தது அரசாங்கத்தின் பதிவுசெய்யப்பட்ட இரண்டு கராஜ்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலைகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள்
VI. பழுதுபார்ப்பு சம்பந்தமான உங்களுடைய பரிந்துரை

2.8 வீதிச் சட்டங்களை மீறியமை அல்லது குடிபோதையில் வாகனத்தை செலுத்தியமையின் அடிப்படையில் கடமையில் ஈடுபட்ட சாரதி நீதிமன்றமொன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டிருப்பின் உரிய நட்டங்களை ஈடுசெய்வதற்கான கோரிக்கையை விடுப்பதற்கு முன்னர் முழுமையான விசாரணையொன்றை நடாத்தி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு வாகனத்திற்குரிய அமைச்சு / திணைக்களம் / கூட்டுத்தாபனத்திற்கு அறிவித்தல் வேண்டும். **அந்த அறிக்கையின் பரிந்துரைகளின் அடிப்படையில் நட்டத்தை ஈடுசெய்தல் சம்பந்தமாக கவனத்திற்கொள்ள முடியும்.**

3. இந்த சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் சம்பந்தமாக போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பான அனைத்துப் பதவிநிலை அலுவலர்கள், தேர்தல்கள் அலுவலகத்தின் தலைமை முகாமைத்துவ உதவியாளர், கணக்கு அலுவலர், களஞ்சியசாலை அலுவலர் ஆகியோரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதாகவும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் / விதிமுறைகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மேலதிகத் தேர்தல் ஆணையாளருக்கு (நிருவாகம்) எழுத்து மூலமாக அறிக்கைப்படுத்தவும்.

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

**பிரதிகள்:**
01. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
02. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு
03. மேலதிகத் தேர்தலகள் ஆணையாளர் (தேசியத் தேர்தல்கள்)
04. தலைமை நிதி அலுவலர்
05. தலைமை உள்ளகக் கணக்காய்வு அலுவலர்

} தயவுடன் தகவலுக்காக மற்றும் உரிய அலுவலுக்காக